தேதி: 26 டிசம்பர் 2013

# <u>பா.ஜ.க தேசிய தலைவர் திரு ராஜ்நாத் சிங் அவர்களின் முகநூல் பதிவு</u>

வேவு பார்த்ததாகச் சொல்லப்பட்ட வழக்கை விசாரிக்கப் புதிய விசாரணைக் கமிஷன் அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது, குஜராத் அரசின் நடத்தைப் பண்பைக் களங்கப்படுத்தும் முயற்சியாகும். வழக்கை விசாரிக்க மாநில அரசு ஏற்கனவே ஒரு கமிஷனை அமைத்திருக்கும்போது, புதியதாக ஒரு விசாரணைக் கமிஷனை அமைப்பதன் பின்னே இருக்கும் குறிக்கோள் என்ன?

இது நமது அரசியல் சாஸனத்தின் கூட்டாட்சி முறைமைக்கு எதிரானதாகும். எங்களுடைய பிரபலமான தலைவரும் பிரதமர் வேட்பாளருமான திரு.நரேந்திர மோடியைக் குறிவைத்து பல முயற்சிகள் கடந்த காலங்களில் நடந்துள்ளன. ஆனால் அவர் ஒவ்வொரு இன்னல் சமயத்திலும் கூடுதல் வலிமையுடன் வெளிப்படுகிறார்.